இன்றைய வேளாண் செய்திகள்

**ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் பலத்த மழை**

ஈரோடு, நாமக்கல், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. ஈரோடு பகுதியில் திங்கள் கிழமை முதல் மழை பெய்து வருகிறது. நேற்று பெய்த மழையால் அரச்சலூர், கோபி, பெருந்துறை, சென்னிமலை உள்ளிட்ட பகுதிகளில் தாழ்வான இடங்களில் மழை நீர் வெள்ளம் போல சூழ்ந்தது. இதே போல சேலம் மற்றும் நாமக்கல்லிலும் மழை கொட்டித் தீர்த்தது.

**தருமபுரியில் இடி, மின்னலுடன் மழை**

தருமபுரியில் செவ்வாய்க்கிழமை இரவு இடி, மின்னலுடன் மழை பெய்தது. தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிக அளவில் இருந்தது. குறிப்பாக, செவ்வாய்க்கிழமை காலை வேளைகளில் வெயில் வாட்டி எடுத்தது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை மாலை மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. மொரப்பூர், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. பென்னாகரத்தில் 48 மி.மீ.: பென்னாகரத்தில் திங்கள்கிழமை அதிகபட்சமாக 48 மி.மீ மழை பதிவானது. பிற இடங்களில் பதிவான மழைஅளவுவிவரம்(மி.மீட்டரில்): தருமபுரி 20, ஆட்சியரகம் 30, பாப்பிரெட்டிப்பட்டி 23. 20,பென்னாகரம் 48, ஒகேனக்கல் 20. ஒகேனக் கல்லில் நீர்வரத்து குறைந்தது: ஒகேனக்கல் காவிரி ஆற்றில் செவ்வாய்க்கிழமை நீர்வரத்து நொடிக்கு 7,000 கன அடியாக இருந்தது. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் திங்கள்கிழமை நீர்வரத்து நொடிக்கு 8,000 அடியாக இருந்த நிலையில், செவ்வாய்க்கிழமை 7,000 கன அடியாகக் குறைந்தது. மஹாளய அமாவாசையை முன்னிட்டு, இங்குள்ள காவிரி ஆற்றில் ஏராளமானவர்கள் தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம்

செய்து வழிபட்டனர். இதன்காரணமாக ஒகேனக்கல் பகுதி களைகட்டி காணப்பட்டது.

**<u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>**

மேட்டூர், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் திங்கள்கிழமை இரவு பெய்த பலத்த மழையின் காரணமாக, அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 8,298 கன அடியாக அதிகரித்தது. கர்நாடக மாநிலத்தில் இருந்து உபரிநீர் திறந்துவிடுவது குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. இந்த நிலையில், மேட்டூர், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் திங்கள்கிழமை நள்ளிரவு 55.6 மி.மீ. மழை பெய்தது. இதனால், செவ்வாய்க்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 8,298 அடியாக அதிகரித்தது. அணையில் இருந்து பாசனத்துக்காக நொடிக்கு 18,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 89.54 அடியாகவும், அணையின் நீர் இருப்பு 52.12 டி.எம்.சி.யாகவும் இருந்தது.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விதை நெல் விளைச்சலில் லாபம் அமோகம்</u>**



சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியைச் சேர்ந்தவர் க.சதீஷ்குமார். டிப்ளமோ மெக்கானிக்கல் இன்ஜினியர். பேரூராட்சி கவுன்சிலராக உள்ள இவர், படிப்பிற்கேற்ற வேலை தேடி அலையாமல், வறட்சி மிக்க சிவகங்கை மாவட்டத்தில்,நெல் சாகுபடியை சவாலாக ஏற்று அதிக லாபம்

ஈட்டி சாதனை படைத்துள்ளார். உணவு தேவையில் அரிசி முக்கிய பங்கு வகிப்பதால் இதில் வெற்றி காண வேண்டும் என்ற லட்சியம் உண்டு என்கிறார். இவருக்கு புதுக்கண்மாய் பாசனத்தில் இரண்டு ஆழ்குழாய் கிணறுகளில் 24 மணி நேரமும் தண்ணீர் கிடைக்கிறது. இறவை பாசனத்தில் 5 ஏக்கர் நிலத்தில் கடந்த 4 ஆண்டுகளாக திருந்திய நெல் சாகுபடி செய்து வருகிறார். **அவர் தெரிவித்ததாவது:** கோடையில் ஏ.டி.டி.,39,45 ரகம்,மழை காலத்தில் பி.பி.டி.5204 ரகம் கர்நாடகா பொன்னி நெல், ஆண்டிற்கு இருபோகம் சாகுபடி செய்கிறேன். விவசாய காலம் 9 மாதம் தவிர 3 மாதம் நிலத்தை உலர வைத்து, தொழுஉரங்கள் போட்டு நிலத்தை பதப்படுத்துவேன். நாற்றங்காலில் விதைத்து 20 நாள் வந்தவுடன் நாற்று எடுத்து 9 செ.மீ., இடை வெளியில் நடவு செய்து, மெழுகு பதமாக காய்ந்தவுடன் தண்ணீர் பாய்ச்சுதல்,15 நாளில் கருவி மூலம் களை எடுத்தல், உரநிர்வாகம், அனைத்தும் வேளாண்மை துறையினர் வழிகாட்டுதல்படி, நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகிறேன். உழவு, களை எடுப்பு, அறுவடை, கதிர் அடிப்பு இயந்திரங்கள் என்னிடம் சொந்தமாக உள்ளது. விதை,நடவு கூலி வகையில் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் செலவாகிறது. பழைய முறையில் சாகுபடி செய்யும் போது ஏக்கருக்கு 2 ஆயிரம் கிலோ 25 மூடைநெல் கிடைக்கும். திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிர் செய்வதால் ஏக்கருக்கு 74 கிலோ கொண்ட 35 மூடை (2600 )கிலோ நெல் மகசூல் கிடைக்கிறது. அறுவடை செய்த நெல்லை பிளான்டில் சுத்தம் செய்து 13 சதவீத ஈரப்பதத்தில் காய வைத்து பதர்நீக்கி மறுஉற்பத்தி செய்யும் விதையாக மாற்றுவேன். வேளாண்மை துறையினர் ஒரு கிலோ விதை நெல்லை ரூ.23 க்கு வாங்கிக் கொள்கின்றனர். மீதமுள்ள நெல்லை வெளிமார்க்கெட்டில் விற்கிறேன். ஒரு ஏக்கருக்கு ரூ.60 ஆயிரம் வீதம் 5 ஏக்கருக்கு ஒருபோகத்திற்கு ரூ 3 லட்சம் கிடைக்கிறது. விதை,நடவு கூலி,உரம், 5 ஏக்கருக்கு ரூ 75 ஆயிரம் செலவுபோக ஒரு ஏக்கருக்கு ரூ 45 ஆயிரம் வீதம் 5 ஏக்கருக்கு ரூ 2.லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் லாபம் கிடைக்கிறது. ஏக்கருக்கு 60 கட்டுவீதம் 600 கட்டு வைக்கோல் கிடைக்கிறது. ஒரு கட்டின் விலை ரூ 150.பசு, காளை மாடுகளுக்கு தீவனமாக பயன்படுகிறது. 3 பசுக்கள் தினமும் 25 லிட்டர் பால் தருகிறது.

வீட்டுதேவைகள் போக மீதி பால், மதிப்புக்கூட்டப்பட்டு நெய் விற்பனை செய்வோம்.இதில் மாதம் ரூ.10 ஆயிரம் கிடைக்கிறது. சாணம், உரத்திற்குப் பயன்படுகிறது. எந்தப் பயிரையும் முழு ஈடுபாட்டுடன் செய்தால் வறண்ட மாவட்டத்திலும் சாதிக்கலாம், நிலமும்,நீரும் இருந்தால் நல்ல வருமானம் பெறலாம், என்கிறார். இவருடன் பேச: 99656 02908 **அழகப்பன், சிங்கம்புணரி.**

<u>நவீன தொழில்நுட்பம்</u>



**கறவை மாடுகளுக்கு தீவனம் அளிக்கும் முறைகள் :**கறவை மாடுகளுக்கு நார்ச்சத்து குறைந்தும், செரிமான சத்துக்கள் அதிகமாகவும் உள்ள தானியங்கள் (மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு, உடைந்த கோதுமை, குருணை அரிசி) புண்ணாக்கு வகைகள் (கடலை புண்ணாக்கு, எள்ளுப்புண்ணாக்கு, சூரியகாந்தி புண்ணாக்கு, சோயா புண்ணாக்கு, தேங்காய் புண்ணாக்கு) தவிடு வகைகள் (அரிசி தவிடு, கோதுமை தவிடு) பருப்பு நொய் (உளுந்தம் பருப்பு, பச்சைப்பருப்பு, கொண்டைக்கடலை) வெல்லப்பாகு, உப்பு, தாதுக்கலவை (சோடியம், பொட்டாசியம், மக்னீசியம், கால்சியம், தாமிரம், துத்தநாகம், இரும்பு, செலினியம், பாஸ்பரஸ்) ஆகியவற்றை தேவையான விகிதத்தில் சரியாகக் கலந்து தயாரிக்கப்படும் தீவனம் அடர் தீவனமாகும். அதிக அளவில் நார்ச்சத்து அல்லது குறைந்த அளவே சேர்க்கக்கூடிய தீவனப் பொருட்களை நார்த்தீவனம் என்று சொல்கிறோம். கறவைமாடு ஒவ்வொன்றும் 100 கிலோ உடல் எடைக்கு 2.5 கிலோ உலர் பொருள் வரை உட்கொள்ளும் 400 கிலோ எடையுள்ள மாடு 10 கிலோ உலர்பொருளை உட்கொள்ளும் கறவை மாடுகளுக்கான உலர்பொருள் தேவையில் 2:3 பாகம் நார்த்தீவனத்திலிருந்தும், 1:3 பாகம், அடர் தீவனத்திலிருந்தும் வருமாறு,

தீவனப்பொருட்களின் அடிப்படையில் கணக்கிட்டு அளிக்க வேண்டும். நார்த்தீவன தேவையில் 2:3 பங்கு பசுமை வகையிலிருந்தும் 1:3 பங்கு உலர் வகையிலிருந்தும் அளிக்க வேண்டும். வைக்கோல், கம்பந்தட்டை, சோளத்தட்டை, கடலைக்கொடி முதலியன உலர்த்தீவனங்கள் ஆகும். தட்டை, வைக்கோல் போன்றவைகளில் 90 சத விகிதம் பசுந்தீவனங்களில் 20-26 சதவிகிதமும், அடர் தீவனத்தில் 90 சதவிகிதமும் உலர் பொருள் உள்ளது. பொதுவாக புண்ணாக்கு, தானியங்கள், தவிடு ஆகியவைகளில் ஈரப்பசை 10 சதவிகிதமும், பசுந்தீவனத்தில் 70-75 சதவிகிதமும் உள்ளது. பொதுவாக நமது கலப்பின பசுக்கள் சுமார் 350 - 400 கிலோ கிராம் எடை இருக்கும். சாதாரண மாட்டின் எடையில் ஒவ்வொரு 100 கிலோ கிராம் எடைக்கும் 1 கிலோ காய்ந்த புல்லும், 3 கிலோ பசும்புல்லும் கொடுக்க வேண்டும்.1.5 கிலோ கலப்புக்தீவனம் ஒரு நாளைக்கு ஒரு கறவை மாட்டிற்கு தன் உடல் பராமரிப்பு தேவையைப் பூர்த்தி செய்யக் தேவைப்படும். தினசரி சுமார் 2.5 லிட்டர் பால் கொடுக்கும் கறவைப் பசுக்களுக்கு உடல்நிலை பராமரிப்பிற்கு அளிக்கப்படும் 1.5 கிலோ அடர்தீவனமே போதுமானது. 2.5 லிட்டர் அளவிற்கு மேல் பால் கொடுக்கும் மாட்டிற்கு, ஒவ்வொரு 2.5 லிட்டர் பாலிற்கும் 1 கிலோ கலப்புத்தீவனம் என்ற விகிதத்தில் கூடுதலாகச் சேர்த்து அளிக்க வேண்டும். **சினை மாடுகளுக்கு :** கருவில் வளர்கிற கன்றின் வளர்ச்சிக்கான 7 மாத சினைமுதல் உடல் பராமரிப்புக்கும், பால் உற்பத்திக்கும் கொடுக்கப்படும் தீவனக் கலவையுடன் உடல் எடையைப் பொறுத்து தினம் 1-1.5 கிலோ தீவனம் அதிகமாக கொடுத்தல் வேண்டும். **பால் வற்றிய மாடுகளுக்கு :** தினசரி 1.5 கிலோ கலப்புத் தீவனம் போதுமானது. **தீவனம் அளிக்கும் முறை :** பண்ணையில் ஒரு குறிப்பிட்ட தீவன முறையை மட்டுமே தினசரி கடைப்பிடிக்க வேண்டும். பொதுவாக கறவை மாடுகளுக்கு முதலில் கலப்புத் தீவனத்தையும், பின் பசுந்தீவனத்தையும், அடுத்தாற் போல் வைக்கோல் அல்லது காய்ந்த புல்லையும் கொடுக்கலாம். அடர் தீவனக் கலவையை ஊறவைத்து அல்லது அளவாக தண்ணீர் சேர்த்துக் கொடுக்கலாம். தீவனத்தட்டைகளை நறுக்கி துண்டாக்கி அளிக்க வேண்டும். அளிக்கப்படும் தீவனங்களில் திடீரென்று மாற்றம் செய்வது நல்லதன்று.

**தீவனப்புற்கள் :** இறவையில் சாகுபடி செய்யும் தீவனப் புற்களான நேப்பியர் புல், கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், கினியா புல் ஆகியவை இவை அனைத்தும் மண் வகைகளிலும், தட்பவெப்பநிலைகளிலும் நன்றாக வளர்கின்றன. சதுப்பு நிலமாக இருந்தால் எருலமப்புல் அல்லது நீரடிப்புல்லை தேர்ந்தெடுக்கலாம். அதிக விளைச்சலுக்கு கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், கோ-1, கோ-2, கோ-3 பயிரிட வேண்டும். (தகவல் : முனைவர்கள் சோ.சித்ரா தேவி, அரங்க மதிவாணன், மு.சபாபதி, இரா.பாலகோபால், கால்நடை மருத்துவ அறிவியல் துறை, த.வே.ப.கழகம், கோவை-641 003. போன்: 0422 - 6611 212.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>பாடுபட்டால் பலன்தரும் பன்றி வளர்ப்பு</u>



கோம்பையில் இருந்து 2 கிலோ மீட்டர் தள்ளி இருக்கிறது ராஜுவின் ஆர்.கே.ஆர். பண்ணை இருக்கிறது. பன்றி வளர்ப்பை பற்றி இயற்கை மிகுந்த அந்த சூழலில் நம்முடன் புன்முறுவலுடன் உரையாடினார்.

**பன்றி வளர்க்கும் முறை :** பன்றி வளர்க்க பொதுவாக 10x10 மீ அறை சரியாக இருக்கும். பொதுவாக ஒரு வருஷத்துக்கு 2 முறை ஈத்து விடுவாங்க. 3 ஈத்து வரையும் விடலாம். இதனால் தாய் பன்றியோட ஆற்றல் குறையும். ஒரு பன்றியின் கர்ப்ப காலம் 114 நாட்கள் ஆகும். ஒரு பன்றி ஒரே பிரசவத்தில் 5 முதல் 14 குட்டிகள் வரை ஈனும். தாய் பன்றிக்கு எத்தனை பால் காம்புகள் இருக்கிறதோ அத்தனை குட்டிகளே பிழைக்கும். ஈன்ற 40 நாட்களில் குட்டிகளை தாய் பன்றியிடமிருந்து பிரித்து விடுவார்கள். பிறந்து 15 நாட்கள் ஆன குட்டிகளுக்கு இரும்புச்சத்து ஊசி போடுவாங்க தாய் பன்றிகளுக்கு 2 மாதத்துக்கு ஒருமுறை ஊட்டச்சத்து

டானிக்கும் (5 மிலி) பூச்சி மருந்தும் கொடுக்கப்படும். பன்றியோட கழிவுகள் தாவர வளர்ச்சிக்கு அதிக சத்துக்களை அளிக்கிறது. இந்த கழிவுகளை விளை நிலங்களுக்கு தெளிப்பாங்க. பன்றிகளை பெங்களூருலிருந்து வந்து நம்ம பண்ணையில வாங்குறாங்க. பன்றி வளர்க்க சிறுதொழில் வளர்ச்சி மையம், பன்றி வளர்ப்பு சங்கம் - பொள்ளாச்சி மூலமாகவும் உதவிகளை வாங்கிக்கலாம். பன்றிகளுக்கு இன்சூரன்ஸ் எடுப்பது நல்லது. நகரங்களாக இருந்தால் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தோட அனுமதியைப் பெறனும். பொதுவாக 3 லட்சம் வரை முதலீடு போட்டால் வருடத்திற்கு 10 லட்சம் வரை லாபம் எடுக்கலாம் என புன்னகையோடு கூறுகிறார் ராஜு. **தகவல் :** மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவிகள், கிராமப்புற பணி அனுபவத்திட்டம் (2014-2015). **- செ.சூர்யா, சி.தமிழ்யாழினி, க.வசந்தா, கு.வேல்மணி நிர்மலா, மா.வெண்ணிலா, சி.விஜயா, ப.செண்பகராணி, அ.ஆஷிகா பீமா.**

## புரட்டாசி அமாவாசை வெள்ளை பூசணி 50 ரூபாய்

ஆர்.கே.பேட்டை : புரட்டாசி அமாவாசையை ஒட்டி, நேற்று பித்ருக்களுக்கு சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. இதற்காக, நீர்நிலைகளில், ஏராளமானோர் குவிந்தனர். அமாவாசை நாளில், முன்னோர்களுக்கு சிறப்பு வழிபாடு மற்றும் தானம் வழங்குவது வழக்கம். நேற்று, புரட்டாசி அமாவாசையை ஒட்டி, பித்ருக்களுக்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. பித்ரு நிவர்த்தி பூஜைக்காக, ஆர்.கே.பேட்டை அடுத்த, சோளிங்கர் தக்கான் குளம், நகரி அடுத்த, புக்கை ஆறு உள்ளிட்ட நீர்நிலைகளில் ஏராளமானோர் குவிந்திருந்தனர்.மேலும், சந்தைகளில், வாழைக்காய் மற்றும் பூசணிக்காய்கள் ஏராளமாக குவிக்கப்பட்டிருந்தன. வெள்ளை பூசணி ஒன்று, 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.கடந்த வாரம், மூன்று வாழைக்காய் 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், நேற்று, இரண்டு காய், 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது.இதேபோல், முருங்கை கீரை, அகத்தி கீரை கட்டுகளும் ஆர்.கே.பேட்டையில் விற்பனைக்காக குவிக்கப்பட்டிருந்தன.

## சேலம் மாவட்டத்தில் கொட்டித்தீர்த்த மழை

சேலம்: சேலம் மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு, மழை கொட்டித் தீர்த்தது. சேலத்தில், கடந்த ஒருவாரமாக, பகல் நேரங்களில், வெயில் வாட்டி வதைக்கிறது. மாலை நேரங்களில், அதிக புழுக்கம் காரணமாக, குழந்தைகள், முதியவர்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இரவு நேரங்களில், மழை பெய்து வருகிறது. கடந்த சில நாட்களாக, தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு, 11 மணிக்கு திடீரென்று மழை பெய்ய துவங்கியது. ஒரு மணி நேரத்துக்கு மேலாக கொட்டித் தீர்த்த மழையால், இரவில், குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவியது. மாநகர பகுதிகளில், ரோட்டில் வெள்ளம் தேங்கி நின்றது. சாக்கடைகள் பெருக்கெடுத்து ஓடியது. சேலத்தில், 57.2 மி.மீ., ஏற்காட்டில், 3.4 மி.மீ., வாழப்பாடியில், 10.06 மி.மீ., ஆத்தூர், 1.6 மி.மீ., சங்ககிரியில், 110 மி.மீ., இடைப்பாடியில், 79 மி.மீ., ஓமலூர், 93 மி.மீ., மேட்டூரில், 55.6 மி.மீ., மழை பதிவானது. அதேபோல், நேற்றிரவும், பல பகுதிகளில் மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## நா.பேட்டையில் மஞ்சள் ஏலம் ரூ. 30 லட்சத்துக்கு விற்பனை

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 30 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி சென்றனர். நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 830 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 6,799க்கும், குறைந்த பட்சம், 5,899 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,110க்கும், குறைந்த

பட்சம், 5,219 ரூபாய்க்கும் ஏலம்போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 12 ஆயிரத்து, 509க்கும், குறைந்த பட்சம், 7,812 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 30 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## தென்னையில் கருந்தலை புழுக்கள் பரவல் : 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட மரங்கள் பாதிப்பு

கிருஷ்ணகிரி; கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில், இரண்டு ஆண்டுக்கு பின், மீண்டும் தென்னையில் கருந்தலை புழுக்களின் தாக்குதல் ஏற்பட்டு, 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 16 ஆயிரம் ஹெக்டரில், 32 லட்சம் தென்னை மரங்கள் உள்ளது. இப்பகுதியில் இருந்து, குஜராத் உள்பட பல வெளி மாநிலங்களுக்கு, தென்னை ஏற்றுமதி செய்யப்படுகிறது. தென்னை சாகுபடி மாவட்டத்தின், பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காக உள்ளது. இரண்டு ஆண்டுக்கு முன், காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில், தென்னையில் கருந்தலை புழுக்கள் தாக்குதல் ஏற்பட்டு, ஆயிரக்கணக்கான மரங்கள் காய்ந்தது. வேளாண்துறை அறிவுரைப்படி, ஒருங்கிணைந்த நோய் தடுப்பு முறைகளை விவசாயிகள் கையாண்டதால், புழுக்களின் தாக்குதல் கட்டுக்குள் வந்தது. இந்நிலையில், காவேரிப்பட்டணம் அடுத்த மிட்டஅள்ளி, மிட்டஅள்ளி புதுார், தளி அள்ளி, சுக்ராண்டஅள்ளி, கருக்கன்சாவடி, அண்ணாகொட்டாய், பெருமாள் கொட்டா பகுதியில் தற்போது மீண்டும் கருந்தலை புழுக்களின் தாக்குதல் ஏற்பட்டு, 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, கோடை பருவத்தில், இவ்வகை புழுக்களின் தாக்குதல் அதிகமாக இருக்கும். கருந்தலை புழுக்களால் பாதிக்கப்பட்ட தென்னை மட்டை களின் அடிபாகத்தில், இலைகள் அரிக்கப்பட்டு, சக்கைகளிலான நீளமான கூண்டுகள் காணப்படும். இந்த புழுக்கள், பச்சையத்தினை

மட்டைகளின் அடிப்பாகத்தில் இருந்து, சுரண்டி தின்பதால் மட்டைகள் சருகு போல காய்ந்து விடுகிறது. அதிகம் நோய்தாக்கிய மரம் காய்ந்து போகும் நிலை ஏற்படுகிறது. விளைச்சல் வெகுவாக பாதிக்கப் பட்டுள்ளதால், அந்த பகுதி தென்னை விவசாயிகள் கலக்க மடைந்துள்ளனர். கருந்தலை புழுக்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து, வேளாண் இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் மற்றும் வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன் ஆகியோர் கூறியதாவது: கருந்தலை புழு தாக்கப்பட்ட ஓலை மற்றும் மட்டைகளை அழிக்க வேண்டும். "கோனியோசிஸ் நெஃபன்டிடிஸ்' என்ற ஒட்டுண்ணிகளை, ஒரு மரத்துக்கு எட்டு வீதம் மரத்தின் அடிப்பாகத்தில் விட வேண்டும். கோடை காலத்தில் தோன்றும், புழுக்களை கூட்டுப்புழு ஒட்டுண்ணி, "இலோஃபிட்' மற்றும் கருந்தலைப்புழுவைத் தாக்கும், ஒட்டுண்ணிகளான "பெதலாய்ட்', "ப்ராகோனிட்' மற்றும் "இனோமோனிட்' ஆகியவற்றை விட்டு, புழுக்களை அழிக்கலாம். வளரும் மரங்களில் இந்த வகை புழுக்களை கட்டுப்படுத்த, மரத்தின் அடிமட்டத்தில் இருந்து, ஒன்றரை மீட்டர் உயரத்தில் மரத்தின் தண்டு பாகத்தில் சாய்வாக துளையிட்டு, அதில், மானோகுரோட்டோபாஸ் ஐந்து மில்லி ஊற்றிய பின், தாமிரக் கரைசல் கலந்த களிமண்ணாமல் மூட வேண்டும். வேர் மூலமாக கட்டுப்படுத்துவதாக இருந்தால், நன்கு வளர்ந்த வேரினை சாய்வாக வெட்டியபின், இதை பாலீத்தீன் பையில், மானோகுரோட்டோபாஸ், 36 டபிள்யூசி, 10 மி.லி., தண்ணீர் கலந்து கலவையில், வேரினை இட்டு நன்றாக பருத்தி பஞ்சை வைத்து இறுக்கமாக கட்டி விடவேண்டும். வேர் மூலம் மருந்து செலுத்துவது, மற்ற முறைகளைவிட, எளியது மற்றும் புழுவை ஒழிக்க சிறந்த முறையாகும். மானோகுரோட்டோபாஸ் மருந்தை வேர் மூலமாக செலுத்துவற்கு முன் மரத்திலுள்ள காய்களை பறிக்க வேண்டும். மருந்து செலுத்திய, 40 நாட்கள் வரை காய்கள் மற்றும் இளநீரை பறிக்க கூடாது. நோய் தாக்கிய இடங்களில், விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு, கருந்தலை

புழுக்கள் பரவுதலை கட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வரும் 26ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

ஈரோடு: ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஈரோடு கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், வரும், 26ம் தேதி கலெக்டர் தலைமையில் நடக்கிறது. அன்று, காலை, 11.30 முதல், 12 மணி வரை மனுக்கள் வழங்கலும், 12 முதல், ஒரு மணி வரை விவசாய பிரதிநிதிகள், விவசாயம் தொடர்பான தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வும், ஒரு மணி முதல், 1.45 மணி வரை அலுவலர்கள் விளக்கம் அளிக்கவும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில், விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.**

கூடலூர் கால்நடை பராமரிப்பு துறை, நீலகிரி ஆவின் மற்றும் வனத்துறை சார்பில் தெங்குமரஹாடா சித்தரமபட்டி, புதுக்காடு, அல்லிமாயார், கல்லாம்பளையம் பகுதிகளில் கடந்த 19ம் தேதி முதல், 21ம் தேதி வரை கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பு ஊசி போடும் சிறப்பு முகாம் நடந்தது. முகாமை வனச்சரகர் செல்வம் துவக்கி வைத்தார்.கூடலூர் கால்நடை துறை உதவி இயக்குனர் கால்நடை டாக்டர் தயாசேகர் தலைமையில், கூடலூர் ஆவின் மேலாளர் கால்நடை டாக்டர் பிரபாகன், அரசு கால்நடை டாக்டர்கள் மகாலிங்கம், கார்திக், ராஜேஷ், செந்தில்குமார், பிரபு காளியப்பன், வினோத் ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினர் சுமார் 1000 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி மற்றும் சிகிச்சை அளித்தனர். இதற்கான ஏற்பாடுகளை ஊராட்சி தலைவர் இருதயராஜ் மற்றும் ஊர்மக்கள் செய்திருந்தனர்.

**நெல் விவசாயத்தில் பழங்குடியினர் ஆர்வம்**

பந்தலூர் : பென்னை புலிகள் காப்பகத்தில் வசிக்கும் பழங்குடியின மக்கள் நெல் விவசாயத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

முதுமலை புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட பென்னை வனப்பகுதியில் குடியிருக்கும் பழங்குடியின மக்கள், அவர்கள் விவசாயம் செய்துவரும் வயல்வெளிகளில் தற்போதும் நெல் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். தற்போது மழை பெய்து வருவதால் அடர்த்தியான வனத்திற்கு மத்தியில் வயல்வெளி பசுமையாக காட்சியளித்து வருகிறது. ஆனால், இப்பகுதியில் வன விலங்குகளில் பிரச்னைகள் இல்லாததால், விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி ஆலோசனைப்படி, வேட்டமங்கலம் பு.காளிபாளையம, பு.குளத்துபாளையம், வடுகபட்டி, நத்தமேடு, ஓலப்பாளையம், ஒரம்புபாளையம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில், கரூர் மாவட்ட கால்நடை மற்றும் பராமரிப்புத் துறையின், நொய்யல் கால்நடை மருந்ததகம் ார்பில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. கரூர் மாவட்ட கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் தங்கராசு தடுப்பூசி முகாமை துவக்கி வைத்தார். முகாமில், கால்நடை மருத்துவர் தமிழரசன், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகளை போட்டார். நடையனூர், திருக்காடுதுறை சுற்றவட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்த, 1,300க்கும் மேற்பட்ட பசு மற்றும் எருமை மாடுகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. முகாமில், கால்நடை ஆய்வாளர்கள் நாகராஜ், நடராஜ், மாரியப்பன் கால்நடை பராமரிப்பு உதவியாளர் மாலதி மற்று ம் பலர் பங்கேற்றனர்.

## <u>வேளாண் அறிவியல் மையத்தில் பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி</u>

பெரம்பலூர்: வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் பட்டுப்பழு வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது என மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) விஜயலட்சுமி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள சில விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு வருமானம் ஈட்டி வருகின்றனர். இதர விவசாயிகள் இந்த

தொழிலை மேற்கொள்ள மிகவும் ஆர்வம் காட்டி வருவதால், வாலிகண்டபுரத்தில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தில் பட்டு வளர்ப்பு குறித்த பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பயிற்சியில், பட்டு புழுக்களின் வகைகள், பட்டுப்புழுக்களுக்கு உணவாக விளங்கும் மல்பெரி நாற்றங்கால் மற்றும் வளர்ப்பு முறைகள், குடில் அமைத்தல், பட்டுப்புழுக்களின் முட்டைகள், இளம் புழுக்களை பாதுகாப்பாக வளர்த்தல், உணவிடும் முறைகள், புழுக்களின் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை, பட்டுக்கூடுகள் மற்றும் அதன் விற்பனை ஆகியவை குறித்து வீடியோ கான்பரன்சிங் மூலம் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் பயன்பெற விரும்புபவர்கள், வேளாண் அறிவியல் மையத்தின் பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநரை 97876-20754 தொடர்பு கொண்டு, பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சிக்கு உரிய நாள் குறித்த விவரங்கள், பட்டு வளர்ப்பு ஆர்வலர்களுக்கு தெரிவிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படும். மேலும், விவரங்களுக்கு வேளாண் அறிவியல் மைய பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப வல்லுநரை நேரில் அல்லது ஃபோன் நம்பரில் தொடர்பு கொள்ளலாம்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

உடையார்பாளையம்: உடையார்பாளையம் அருகே உள்ள ஜெ.குளத்தூரில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. முகாமிற்கு, பஞ்., தலைவர் வெங்கடேசன் தலைமை வகித்தார். திருச்சி ஆவின் இயக்குனர் கண்ணகி, ஜெ.குளத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க செயலாளர் மாயவேல் முன்னிலை வகித்தனர். கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் செல்வபெருமாள், முகாமை துவக்கி வைத்தார். கால்நடை மருத்துவர்கள் கண்ணன், செந்தில் ஆகியோர் தலைமையில் ஆய்வாளர்கள் தமிழரசி, அர்ச்சுணன், உதவியாளர்கள் ஜெயசித்ரா, ஆனந்தநாயகி உள்ளிட்ட மருத்துவக்குழுவினர் சிகிச்சை அளித்து பராமரிப்பு குறித்து

ஆலோசனைகள் வழங்கினர். முகாமில், 369 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

## பயிர்களை துவம்சம் செய்யும் பூச்சிகளை அழித்து ஒழிக்க "டேப்லெட்' வினியோகம்

வடமதுரை, : பயிர்களை துவம்சம் செய்யும் பூச்சிகளின் வகையறிந்து, அதனை அழிப்பதற்கான தீர்வினை தெரிந்துகொண்டு நடவடிக்கை மேற்கொள்வதற்காக வேளாண்மை களப்பணியாளர்களுக்கு "டேப்லெட்' வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தி இலக்கினை நடப்பு ஆண்டில் பூர்த்தி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் வேளாண்மை துறையினர் மேற்கொண்டுள்ளனர். புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. பயிர் சாகுபடியின்போது ஏற்படும் இடர்பாடுகளை களைவதற்காக, உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு "டேப்லெட்' வழங்கப்பட்டுள்ளது. வடமதுரை வேளாண்மை உதவி இயக்குனர் ராணி கூறியதாவது:"பயிர் வளர்ச்சியில் ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாடுகள், பூச்சி தாக்குதல், நோய் பரவுதல் பிரச்னைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. புதிதாக பயிர்களை தாக்கி துவம்சம் செய்யும் பூச்சிகளை, களப்பணியாளர்கள் "டேப்லெட்' டில் பதிவு செய்து கோவை விவசாய பல்கலை அதிகாரிகளின் பார்வைக்கு அனுப்பி வைப்பார். அவர்கள், பூச்சியை இனம் கண்டு, அதை அழிப்பதற்கான வழிமுறைகளை தெரிவிப்பர். இதனால், நோய் தாக்குதல் பரவாமல் தடுக்கப்படும். மகசூல் அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். அனைத்து விவசாயிகளின் அடிப்படை தகவல்கள் பதிவு செய்யப்பட்டு தேவையான தகவல்கள் எஸ்.எம்.எஸ்., சில் அனுப்பப்படும். இதன் மூலம் சந்தை நிலவரத்தை விவசாயிகள் அறிந்து கொண்டு அதற்கேற்ப தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்யலாம்,' என்றார்.

## வசந்தத்தை தேடும் "பூ' விற்பனையாளர்கள்

"மல்லி, மல்லி, மல்லி' என கூவியவாறு கார், பஸ்கள் நிற்கும் இடங்களில் தட்டோடு ஓடிச்சென்று பெண் பயணிகளிடம், "பூ' வாங்கி தலையில வச்சிங்கங்கம்மா,' என வாஞ்சையோடு விற்பனை செய்பவர்களை பலர்

பார்த்திருப்பர். குறிப்பிட்ட ஸ்டாப்பில் இரண்டு நிமிடத்திற்கும் குறைவான நேரத்தில் பஸ் நின்றாலும், இவர்கள் சளைக்காமல் "பூ' விற்பதிலேயே குறியாக இருந்து யாராவது ஒரு பயணியை வாங்க வைத்து விடுவர். "எந்த விசேஷமும் இல்லை. இருந்தாலும், "பூ'க்கு இந்த விலை சொல்றியேமா,' என கேட்கும் பெண் பயணிகளிடம், இது மதுரை மல்லிமா, வேற எங்கேயும் கிடைக்காது. தலையில வச்சீங்கன்னா முகமே ஜொலிக்கும்,' என பேசி, பேசியே தட்டில் இருக்கும் "பூ'க்களின் அளவை குறைத்துக் கொண்டிருப்பர். பரபரப்பான பயண நேரங்களில் கால்கடுக்க நின்று, வாகனங்கள் வரும்போதெல்லாம் ஓடிச்சென்று பேரம் பேசி, வாங்க வற்புறுத்தி, பஸ் கிளம்பும்முன் காசை வாங்கி, மீதி சில்லரையை கொடுத்து, அதற்கு அடுத்த வாடிக்கையாளரை பூ வாங்கச் செய்வது என்பது சாதாரணமானதல்ல. திண்டுக்கல் மாவட்டம், சிலுக்குவார் பட்டியை சேர்ந்த 40 குடும்பத்தினருக்கு இதுதான் வாழ்வாதாரம். மதுரையிலிருந்து வத்தலக்குண்டுக்கு வரும் பஸ்கள், கொடைக்கானல், தேனி, மதுரை மற்றும் திண்டுக்கல், சின்னாளபட்டி வழியாக வத்தலக்குண்டு செல்லும் வாகனங்கள் அனைத்துமே சிலுக்குவார்பட்டி மூன்று ரோடு சந்திப்பை கடந்துதான் செல்ல வேண்டும். இந்த பகுதியில், தினமும் காலை 7 மணியிலிருந்து பகல் 12 மணி வரையிலும், விசேஷ நாட்களில் காலை 6 மணியிலிருந்து பகல் 12 மற்றும் மாலை 4 மணியிலிருந்து இரவு 7.30 வரை "பூ' தட்டோடு, இவர்கள் பம்பரமாக சுற்றிச்சுழன்று கொண்டிருப்பர். திண்டுக்கல் மாவட்டத்தில் "பூ' சாகுபடியில் நத்தம், பழநி, நிலக்கோட்டை பகுதிகள் நீண்டகாலமாக முன்னிலையில் உள்ளன. இங்கிருந்து, விளைவிக்கப்படும் பூக்கள் உள்ளூர் தேவைபோக வெளி மாவட்டம், மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு, வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வீடு, வீடாக சென்று "பூ' விற்பவர்களின் மத்தியில் குறிப்பிட்ட சில குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாகனங்களில் வரும் பயணிகளுக்காக "பூ'க்களை விற்பனை செய்கின்றனர். கடந்த 30 ஆண்டுகளாக "பூ' விற்பனையில் ஈடுபட்டுள்ள ராணி கூறுகையில், ""நாங்கள் நான்கு பேர் இணைந்து ஒரு கிலோ மல்லிகையை அன்றைய விலைக்கேற்ப வாங்கிக்கொள்வோம். சாதாரண நாட்களில் கிலோ ரூ. 600 க்கு

விற்கப்படும். விசேஷ நாட்களில் ரூ. ஆயிரத்து 500 ஐ தாண்டிவிடும். "பூ'வை, நான்கு பங்காக பிரித்து ஒவ்வொருவரும் தொடுத்து கட்டுவோம். கட்டுக்கூலி தலா ரூ. 60 என நிர்ணயித்துக் கொள்வோம். "பூ'க்களை பயணிகளிடம் விற்றபின்னர், கிடைக்கும் லாபத்தை பகிர்ந்து கொள்வோம். எங்களின் குடும்ப செலவிற்கு இந்த "பூ' விற்பனைதான் ஆதாரமாக உள்ளது. எங்களின் குழந்தைகள் படித்து நல்ல நிலைமைக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான், நாள்தோறும் பஸ்களின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறோம்,' என்றார். **டேவிட் :** "ஒரு சில பஸ்கள் 5 நிமிடங்கள் வரை நிற்கும். சில பஸ்கள், வந்த வேகத்தில் கிளம்பி விடும். பேரம் பேசி, "பூ'வை கொடுத்து அவர்களிடமிருந்து காசை வாங்கும்வரை பதட்டமாகவே இருக்கும். சிலர், பஸ் நகர்ந்தாலும் பின்பக்கமாக நாம் ஓடிவருவதை பார்த்து, பணத்தை கீழே எறிந்து விட்டு செல்வார்கள். வேறு சிலர், "பூ'வை வாங்கி விட்டு பணம் தராமலே சென்று விடுவார்கள். எல்லா வேலையிலும் கஷ்டமும், நஷ்டமும் இருக்கத்தான் செய்கிறது. எங்களையும் சக மனிதர்களாக சிலர் நினைத்து புன்னகையோடு "பூ'வை வாங்கி தலையில் வைக்குக் கொண்டு பேரம் பேசாமல் காசை தருவர். மீதி சில்லரை கொடுத்தாலும் ஒரு தலையசைப்பில் வேண்டாம் என மறுத்து விட்டு செல்வர். மனதில் நிலைத்திருக்கும் அவர்களின் முகமே, வேதனையை மறக்கடித்து விடும். **சகாயமேரி :** "பூ' வித்தாதான் எங்களுக்கு சோறு. இல்லைன்னா பட்டினிதான். அரிசி இருந்தாலும் அதை ஆக்கி திங்க மனசு வராது. ஒரு முழம் "பூ'க்கூட விக்கலையே என்ற ஏக்கமும், ஏமாற்றமும்தான் நெஞ்சை அடைக்கும். சுய உதவி குழுக்களுக்கு வங்கியிலிருந்து கடன் வாங்கி தருவதாக கூறுகின்றனர். எங்கள் பகுதியில் எந்த குழுவும் இல்லை. மற்றவர்களைப்போன்று நாங்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அதற்கு வழி காட்டுபவர்கள் யார், என்பதுதான் எங்களின் நீண்டகால தேடலாக உள்ளது,' என்றார். ஈடு இணையில்லாத வாசனை மலரை கையில் ஏந்தி விற்பனை செய்யும் இவர்களின் வாழ்க்கை, ரோட்டோரங்களிலேயே அஸ்தமனமாகாமலிருக்க மாவட்ட நிர்வாகமும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை வழங்க முன்வர வேண்டும்.

**கரும்பு விவசாயிகளுக்கு நிலுவை தொகை ஒரு வாரத்துக்குள் வழங்க உத்தரவு**

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வட்டியுடன் சேர்த்து வழங்குமாறு, தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில், கரும்பு சாகுபடி செய்துவரும் விவசாயிகளிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட விலையில், அரசு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள், கரும்பு கொள்முதல் செய்து வருகிறது. இதற்காக, ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகையை முழுமையாக வழங்காமல், சர்க்கரை ஆலைகள் இழுத்தடித்து வருகிறது. கடந்த ஆண்டு அரவை பருவத்துக்காக, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்துள்ள கரும்புக்கு, உரிய தொகை கொடுக்காமல், சர்க்கரை ஆலைகள் பாக்கி வைத்துள்ளது. சர்க்கரை ஆலைகளிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுத்தருமாறு விவசாயிகள், மாவட்ட நிர்வாகத்திடம் முறையிட்டனர். இதையடுத்து, கரும்பு விவசாயிகளுக்கு வழங்க ÷ வண்டிய நிலுவைத் தொகை குறித்து, திருமண்டக்குடி ஆரூரான் சுகர்ஸ், கோட்டூர் அம்பிகா சுகர்ஸ் ஆகிய தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகிகளுடன், மாவட்ட கலெக்டர் சுப்பையன் ஆலோசனை நடத்தினார். கடந்த, 2013-14 அரவை பருவத்துக்காக கரும்பு கொள்முதல் செய்ததில் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை, 29 கோடியே, 53 லட்சம் ரூபாயும், காலதாமதம் செய்ததற்காக, 3 கோடியே, 17 லட்சம் ரூபாய் வட்டியும் சேர்த்து, ஒரு வாரத்துக்குள் பட்டுவாடா செய்யவேண்டும். தவறினால், இரண்டு சர்க்கரை ஆலைகள் மீதும் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும், என கலெக்டர் எச்சரிக்கை விடுத்தார்.

**தேவையான உரம்,விதை கையிருப்பு; இணை பதிவாளர் தகவல்**

விருதுநகர் : விருதுநகர் மாவட்டத்தில் பருவ மழை தொடங்கி உள்ளதால், மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கப்பட உள்ளது.

விவசாயத்திற்கு தேவையான உரங்கள், விதைகள் கூட்டுறவு சங்கங்களில் தேவையான இருப்பு உள்ளது. கூடுதல் விபரங்களுக்கு தங்கள் பகுதி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தை அணுகி பயன் பெறலாம் என, விருதுநகர் மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## சிறுதானியங்களுக்கு வரவேற்பு

சிவகாசி : சிறுதானியங்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளதாக,சிவகாசியில் நடந்த இயற்கை உணவு முகாமில் தெரிவிக்கப்பட்டது.சிவகாசியில் நம்மாழ்வார் நலவாழ்வு மையம் சார்பில், இயற்கை உணவியல் பயிற்சி முகாம், இயற்கை மருத்துவர் மாறன்ஜி தலைமையில் நடந்தது. "பாரம்பரிய உணவுகளின் எதிர்காலம் என்ற தலைப்பில்' சிறுதானிய உணவு ஆர்வலர் பாமையன் பேசியதாவது:"50, 60 ஆண்டுகளுக்கு முன்பு காட்டு உணவாக தேன், பழங்கள், காய்கறி, தானியம் என 160 வகை உணவுகள் இருந்தன. தற்போது அரிசி உணவு, கோதுமை என ஓரிரு உணவு என்ற வகையில் சுருங்கி விட்டது. உணவுகளை தொழிற்சாலைகளில் தயாரிக்கும் நிலை உருவாகி வருகிறது. சிறுதானியங்கள் அதிக சத்துக்களை கொண்டுள்ளன. குதிரைவாலி சிறுதானியத்தில் கோதுமையை விட 6 மடங்கு நார்ச்சத்து அதிகம் உள்ளது. தினை அரிசியில் அதிக புரதசத்துள்ளதால் குழந்தைகள், கர்ப்பினிகளுக்கு ஏற்றது. வரகு அரிசி சர்க்கரை நோயாய்க்கு சிறந்த மருந்து. தற்போது மக்களிடம் ஆரோக்கிய உணவு சாப்பிடும் பழக்கம் வளர்ந்து வருகிறது. இதனால் சிறுதானியங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இயற்கை உணவுகளுக்கு நல்ல எதிர்காலம் உண்டு , என்றார். இயற்கை உணவு தயாரிப்பு பற்றி ரமேஷ், சூப்வகை தயாரிப்பு பற்றி கீர்த்திகா, ஆயிஷா விளக்கினர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தேயிலை கொழுந்து விலை உயர்வு</u>**




மூணாறு : கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில், பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில், தேயிலை விவாயம் நடைபெறுகின்றது. பெரிய தேயிலை கம்பெனிகளை தவிர, அதிக அளவில் சிறு விவசாயிகளும் இதில் ஈடுபட்டு வருகின்றனர். தேயிலை செடிகளில் உள்ள கொழுந்தை கூலியாட்கள் மூலம் பறித்து, தேயிலைத்தூள் தயாரிக்கும் பெரிய கம்பெனிகளுக்கு அனுப்புகின்றனர்.பல வருடங்களாக, ஒரு கிலோ பச்சை கொழுந்தின் விலை ரூ.6 ஆக இருந்தது.தேயிலை தோட்டத்தில் வேலை செய்யும், ஒரு கூலி தொழிலாளிக்கு, ஒரு நாளைக்கு சம்பளமாக, ரூ.450 கொடுத்து வருகின்றனர். இதனால், தேயிலை விவசாயிகள் பெரும் பொருளாதார நஷ்டத்தை சந்தித்து வந்தனர். தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 30 முதல் 40 கிலோ கொழுந்து வரை மட்டுமே பறிக்கின்றனர். தற்போது ஒரு கிலோ பச்சைக்கொழுந்து ரூ.14க்கு, விற்பனையாவதால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## உணவு பொருள் இறக்குமதி கனடாவுக்கு வேண்டுகோள்




புதுடெல்லி: இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் கக்காளி, கிராட்சை உள்ளிட்ட விவசாய விளைபொருட்களை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும் எனவும், இதன்மூலம் இரு நாடுகளிடையே வர்த்தக சமநிலை ஏற்படும் எனவும் மத்திய விவசாயத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் கூறியுள்ளார். கனடா விவசாய அமைச்சர் ஜெரி ரிட்சுடனான சந்திப்பின்போது இதை வலியுறுத்தினர். உற்பத்தி இடத்தில் இருந்து சந்தை வரை விளை பொருட்களை கெடாமல் கொண்டு செல்ல தொடர்ச்சியான குளிர்பதன வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இது இந்திய விவசாய உற்பத்தியை மேம்படுத்தும் என்று அவர் கூறினார்.

## பென்னாகரத்தில் 40 மி.மீ மழை பதிவு

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டம் பென்னாகரத்தில் நேற்று முன்தினம் இரவு 40 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை நிறைவடையும் தருவாயை எட்டியுள்ளது. இதன் எதிரொலியாக தர்மபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு மழை கொட்டியது. இதன்படி, தர்மபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, பென்னாகரம், ஒகேனக்கல், கலெக்டர் அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மழை பெய்தது. தர்மபுரி நான்கு ரோடு, பென்னாகரம் ரோடு, திருப்பத்தூர் ரோடு பகுதிகளில் மழைநீர் வழிந்தோடியது. பிடமனேரி

ரயில் வே குகை பாலம், அப்பாவுநகர் ரயில்வே குகை பாலத்தில் சேறும், சகதியுமாக காட்சியளித்தது. நேற்றும் தர்மபுரி மற்றும் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மழை கொட்டியது. தர்மபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையின் அளவு விபரம் மி.மீட்டரில் வருமாறு: தர்மபுரி - 20 மிமீ, பாப்பிரெட்டிப்பட்டி - 23.20 , பென்னாகரம் - 48 , கலெக்ட்ரேட் - 30 மில்லி மீட்டர் மழை பதிவாகியிருந்தது.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் 'பட்டம் விட்டு நடவு செய்தால் நட்டம் ஏதுமில்லை' நன்மை செய்யும் பூச்சியினம்**

அன்னவாசல், : ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளில் ஒன்றான பட்டம் விட்டு நடவு செய்யும் முறையை அதாவது நெல் நாற்றுக்களை நடவு செய்யும்போது எட்டடிக்கு ஒரு அடி இடைவெளி விட்டு நடவு செய்யும் முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என வேளாண் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து புதுகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் நடவுப்பணிகள் பாசன வசதிகள் உள்ள இடங்களில் நடை பெற்று வருகிறது. பொது வாக நெற்பயிரில் பூச்சி நோய்களை வந்த பின் கட்டுப்படுத்துவதை விட வரு முன் காப்பதே சிறந்த வழியாகும். தொடக்கத்திலேயே ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறை களைப் பின்பற்றி வந்தால் நெற்பயிரில் பூச்சி நோய்த் தாக்குதலைப் பெருமளவ கட்டுப்படுத்தி கூடுதல் மகசூல் பெறுவ தோடு சாகுபடி செலவினையும் குறைக்கலாம். ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளில் ஒன்றான பட்டம் விட்டு நடவு செய்யும் முறையை அதாவது நெல் நாற்றுக் களை நடவு செய்யும்போது எட்டடிக்கு ஒரு அடி இடை வெளி விட்டு நடவு செய்யும் முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதனால் பயிரு க்கு நல்ல சூரிய வெளிச்சம் கிடைப்பதோடு மண்ணில் உள்ள நுண்ணு யிர்களின் செயல் பாடு அதிகமாகி பயிர் நன்கு வளரும். மேலும் பூச்சி நோய்த் தாக்குதல் அதிக மாக இருக்காது. மிகவும் நெருக்கமாக நடவு செய்வ தால் பூச்சி நோய்த் தாக்குதல் அதிகமாக இருக்கும். மேலும், பட்டம் விட்டு நடவு செய்வதால் உரமிடும்போதும், பூச்சி மருந்து தெளிக்கும்போதும் மற்றும் களை எடுக்கும்போதும் நெற்பயிர்கள் சேதம் அடையாது.

இதனால் நெல் மகசூல் கூடுதலாகக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பட்டம் விட்டு நடவு செய்தால் நட்டம் ஏது மில்லை. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறை களில் ஒன்றான வயல் வரப்புகளில் தட்டைப்பயறு விதைக்கலை மேற்கொள்ள வேண்டும். நடவு வயலில் வயல் மட்டக்கில் இருந்து வரப்பின் ஓரத்தில் மூன்றில் ஒரு பங்கு உயரத்தில் தட்டைப் பயறு விதைக்க வேண்டும். இந்த தட்டைப் பயிரில் நெற்பயிரைத் தாக்காத அசுவினிகள் உற்பத்தியாகும். இதனால் ஏராளமான பொறிவண்டுகள் கவரப்படும். வரப்பில் தட்டைப் பயறு விதைப்பதால் வரப்பு சுத்தமாகி களைகள் இன்றி உள்ளதால் களைகள் மூலம் பரவும் நோய்கள் கட்டுப்படுத்தப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 2 கிலோ தட்டைப் பயறு மட்டும் போது மானது. தட்டைப் பயறு விதைப்பதால் விவசாயிகளுக்குக் கூடுதலாக வருமானமும் கிடைக்கும்.எனவே நடவு வயலில் மேற்கண்ட தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்துவதோடு கூடுதல் மகசூலும் பெறலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர். பொறி வண்டுகள் பயிருக்கு நன்மை செய்யும் பூச்சியினமாகும். பொறிவண்டுகள் நெற் பயிரைக் காக்கும் பலவிதமான சாறு உறிஞ்சும் பூச்சிகளைத் தாக்கி அவற்றை உண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்தும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள்</u>**



எந்த ஒரு நாட்டிலும் தொழிலும், வேளாண்மையும் இரு தண்டவாளங்கள் போல அமைந்தால்தான், வளர்ச்சி என்ற ரெயில் வேகமாக செல்ல முடியும். அதனால்தான் தமிழக அரசு இதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்போது, அதற்குரிய பலனை விவசாயிகள் அடையும் நிலையை உருவாக்கினால்தான், அவர்களும் ஊக்கத்தோடு விவசாயத்தில் ஈடுபடுவார்கள். இதில் உணவு பதப்படுத்தல் வசதிகள் அதிகமாக இருந்தால்தான், விவசாயிகள் விளைபொருட்களை பத்திரமாக சேமித்து வைத்து, உரிய விலை கிடைக்கும்போது விற்று லாபம் பார்க்கமுடியும். அந்த வசதி இல்லையென்றால், அந்த நேரத்தில் என்ன விலை கிடைக்குமோ?, அந்த விலைக்கு விற்கத்தான் முடியும். இது அழுகும் பொருட்களுக்கு மிகமிக பொருந்தும். விவசாயிகள் மட்டுமல்ல, வியாபாரிகளும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்கு அத்தாட்சி மார்க்கெட்டுகளில் அவ்வப்போது வெளியே கொட்டப்படும் காய்கறிகள், பழங்கள்தான். நாடு முழுவதும் இவ்வாறு போதிய அளவில் பதப்படுத்தும் வசதிகள் இல்லாததால் ஆண்டுக்கு ரூ.44 ஆயிரம் கோடி மதிப்புள்ள உணவுப்பொருட்கள் அழுகிப் போய் விடுகின்றன. இதுபோன்ற நிலையைத் தடுக்க, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அதிக அளவில் அமைத்தால் விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைக்கும். நுகர்வோருக்கும் ஆண்டு முழுவதும் ஒரு குறிப்பிட்ட சீசனில் மட்டும் விளையும் எல்லா உணவு பொருட்களும் தங்கு தடையின்றி கிடைக்கும். அதனால்தான் உலகம் முழுவதிலும் இந்த தொழில் அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. தமிழ்நாட்டிலும், பயிறு வகைக்காக புதுக்கோட்டை மாவட்டத்திலும், தக்காளிக்காக தர்மபுரி மாவட்டத்திலும், வாழைக்காக தேனி மாவட்டத்திலும், கொப்பரைக்காக கோயம்புத்தூர் மாவட்டத்திலும், நிலக்கடலைக்காக விழுப்புரம் மாவட்டத்திலும் பதப்படுத்தும் மையங்களை 75 சதவீதம் தனியார் மற்றும் 25 சதவீதம் விவசாயிகளின் பங்களிப்புடன் தொடங்கவும், விவசாயிகளின் 25 சதவீத பங்களிப்பை தமிழக அரசே ஏற்றுக்கொண்டு விரைவில் இந்த மையங்களைத் தொடங்கவும் தமிழக அரசு நட வடிக்கை

எடுத்துவருகிறது. இந்த சூழ்நிலையில், தோலை உறித்து பழத்தை கொடுத்தும், வாங்காத ஒரு நிலையை தமிழ்நாட்டில் ஏற்படுத்தி விட்டார்கள். மோடி அரசாங்கத்தில் உணவு பதப்படுத்தல் தொழிலுக்காக தனியாக ஒரு அமைச்சகம் இருக்கிறது. அந்த துறையின் மந்திரியாக ஹர்சிம்ரத் கவுர் பாதல் என்ற பெண் மந்திரி இருக்கிறார். உணவு பதப்படுத்தும் தொழிலுக்காக இந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டில் ரூ.2 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏராளமான உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் கொண்ட 22 உணவு பூங்காக்களை நாடு முழுவதும் தொடங்குவதற்கான முயற்சிகளில் மத்திய உணவு பதப்படுத்தும் துறை எடுத்துவருகிறது. உணவுபொருட்கள் வீணாவதைத் தடுத்து, பதப்படுத்தவும், ஏற்றுமதிகளை ஊக்குவிக்கவும், இதன்காரணமாக உணவு பணவீக்கத்தை குறைக்கவும் நட வடிக்கை எடுத்துவரும் முயற்சியின் ஒருபகுதியாக இந்த 22 உணவு பூங்காக்களில் தொழிற்சாலைகள் தொடங்க யார்–யார்? விருப்பம் தெரிவிக்கிறார்கள் என்று விண்ணப்பம் கோரப்பட்டது. இந்த தொழிலைத் தொடங்க நபார்டு வங்கி குறைந்த வட்டியில் கடன்தர தயாராக இருக்கிறது. இதற்கான எந்திரங்களை இறக்குமதி செய்வதற்கான வரியும் 10 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பழங்கள், காய்கறிகள், பால், கோழி வளர்ப்பு என்று உணவுபதப்படுத்தும் தொழிலுக்கு ஏராளமான வாய்ப்புகள் இருந்தும், உணவு பூங்காக்களில் தொழிற்சாலைகள் தொடங்க அதிகமாக யாரும் ஆர்வம் காட்டவில்லை, எனவே, இந்த ஆண்டு மத்திய அரசாங்கத்தின் உணவு பூங்கா தமிழ்நாட்டில் தொடங்கப்படுவதற்கான வாய்ப்பு இன்றைய சூழ்நிலையில் கை நழுவிப்போய்விட்டது. கர்நாடக மாநிலம் தும்கூரில் முதல் உணவு பூங்காவை இன்று பிரதமர் நரேந்திரமோடி தொடங்கி வைக்கிறார். தமிழக தொழில்துறை இதை விட்டுவிடக்கூடாது. ‘ஒரே கல்லில் இரு மாங்காய்’ என்பதுபோல, விவசாயத்துக்கும், வேளாண்மைக்கும் பலனளிக்கும் இந்த உணவு பூங்காக்களை தமிழ்நாட்டில் தொடங்குவதற்காக தொழில் முனைவோருக்கும் விவரமாக எடுத்துச்சொல்லி, மத்திய அரசாங்கத்தோடும் பேச்சுவார்த்தை நடத்தி முயற்சி எடுக்கவேண்டும். ஒரு இடத்திலாவது உணவு பூங்கா தொடங்கப்படவேண்டும்.

## செந்துறை அருகே வறட்சியிலும் பூத்து குலுங்கும் செண்டுமல்லி பூக்கள் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை



செந்துறை அருகே வறட்சியிலும் செண்டு மல்லி பூக்கள் பூத்து குலுங்குகின்றன. எனினும் விலை வீழ்ச்சி அடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

செண்டுமல்லி பூக்கள்

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தாலுகா செந்துறை அருகே மங்களப்பட்டி, சிரங்காட்டுப்பட்டி, குரும்பபட்டி, பிள்ளையார்நத்தம், மணக்காட்டூர், கோசுகுறிச்சி உள்ளிட்ட பல கிராமப் பகுதிகளில் செண்டுமல்லி பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. தற்போது கடுமையான வறட்சி நிலவி வரும் நிலையிலும், விவசாயிகள் விலைக்கு தண்ணீர் வாங்கி பயிர்களுக்கு பாய்ச்சி வருகின்றனர். இதனால் வறட்சியை கடந்து செண்டுமல்லி பூக்கள் பூத்து குலுங்கி கண்களை கவரும் வகையில் காணப்படுகின்றன. இந்தப் பூக்களை விவசாயிகள் அறுவடை செய்து விற்பனை செய்து வருகின்றனர். ஆனால், செண்டுமல்லி பூக்கள் ஒரு கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை தான் விற்பனை ஆகிறது. இது உற்பத்தி செலவைவிட குறைவாக இருக்கிறது.

விவசாயிகள் கவலை

இதனால் பூ விவசாயிகள் பெரும் கவலை அடைந்து வருகின்றனர். தற்போது கோவில் திருவிழா, திருமண விழாக்கள் அதிக அளவில் இல்லாததால் செண்டு மல்லி பூக்களுக்கு அதிக வரவேற்பும் இல்லை.

இதனால் பூக்களை பறிக்கவும் முடியாமல், பறித்த பூக்களை விற்றாலும் சரியான விலையும் கிடைக்காமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். இன்னும் சில நாட்களில் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை ஆகியவை வர இருப்பதால் விவசாயிகள் ஓரளவு நம்பிக்கையில் உள்ளனர்.

**<u>நீண்ட நாட்களுக்கு பிறகு ஈரோட்டில் மழை கொட்டியது</u>**



ஈரோட்டில் நீண்ட நாட்களுக்கு பிறகு நேற்று முன்தினம் இரவு மழை கொட்டியது.

ஈரோட்டில்மழை

ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு திடீரென்று 2 நாட்கள் மழை பெய்தது. அதைத்தொடர்ந்து வானத்தில் கருமேகங்கள் கூட சூழாத நிலை இருந்தது. கடந்த ஒரு வாரமாக வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. வெளியில் செல்ல முடியாத அளவுக்கு கோடை வெயில் போல கொளுத்தியது. பகல் நேரங்களில் ரோட்டில் சென்றால் வென்னீரை முகத்தில் ஊற்றியதுபோல வெயில் சுட்டெரித்தது. அனல் காற்று வீசியது. வீடுகளுக்குள் வெப்பம் அதிகமாக இருந்தது. அதுபோல் நேற்று முன்தினமும் பகலில் வெப்பம் கடுமையாக இருந்தது. இந்த நிலையில் இரவு 9 மணி அளவில் சிறு தூறலாக மழை தொடங்கியது. சிறிது நேரம் விட்டு விட்டு சாரலாக பெய்துகொண்டிருந்த மழை, பின்னர் வலுத்து பெய்தது. நள்ளிரவில் பலத்த மழை கொட்டியது. இதனால் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பள்ளங்களில் தண்ணீர் தேங்கியது. மழையுடன் பலத்த-இடி மின்னலும் இருந்தது. ஆங்காங்கே சுழற்காற்றும் வீசியது. மரம் விழுந்தது இந்த பெருமழையில் ஈரோடு

பெரியார் நகர் பகுதியில் நின்ற பெரிய மரம் ஒன்று வேரோடு சாய்ந்தது. இரவு நேரத்தில் மரம் விழுந்ததால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. மார்க்கெட் பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதில் சாக்கடைகளில் இருந்து கழிவுகள் ரோட்டுக்கு வந்தன. இதனால் நேற்று காலையில் ரோடுகள் சேறும் சகதியுமாக கிடந்தன. மழை காரணமாக சாலையில் விழுந்து கிடந்த மரத்தை மாநகராட்சி பணியாளர்கள் நேற்று காலையில் வெட்டி அப்புறப் படுத்தினார்கள். கருங்கல்பாளையம் காமராஜர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மழை நீர் குட்டைபோல தேங்கி கிடந்ததால் காலையில் மாணவர்கள் பள்ளிக்கூடத்துக்குள் செல்ல சிரமப்பட்டனர். மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது.

மழை அளவு

ஈரோடு மாவட்டத்தில் பதிவான மழை அளவு வருமாறு:-

சத்தியமங்கலம்-90மி.மீட்டர்

கோபி-86மி.மீட்டர்

கொடிவேரி-80மி.மீட்டர்

கவுந்தப்பாடி-58மி.மீட்டர்

ஈரோடு-45மி.மீட்டர்

பெருந்துறை-39மி.மீட்டர்

ஒரத்துப்பாளையம்-39மி.மீட்டர்

பவானி-26.6மி.மீட்டர்

சிவகிரி-25மி.மீட்டர்

பவானிசாகர்-24.6மி.மீட்டர்

புங்கம்பாடி-23.6மி.மீட்டர்

அறச்சலூர்-21மி.மீட்டர்

மொடக்குறிச்சி-12மி.மீட்டர்

சென்னிமலை-9மி.மீட்டர்

மேற்கண்டவாறு மழை அளவு பதிவாகி உள்ளது. அதிகபட்சமாக சத்தியமங்கலத்தில் 90 மி.மீட்டர் மழை கொட்டி உள்ளது.

<u>மதுரையில் குவியும் சிம்லா ‘பிஞ்சு’ ஆப்பிள் ஒரு கிலோ 80 ரூபாய்</u>



சிம்லாவில் ரூ.20–க்கு விற்கப்படும் ஒரு கிலோ பிஞ்சு ஆப்பிள் மதுரையில் ரூ.80க்கு விற்பனையாகிறது.

<u>700 ரகங்கள்</u>

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் டாக்டரை பார்க்க வேண்டாம் என்பார்கள். இது தான் உலகம் முழுவதும் ஆப்பிள் பழத்தை மக்கள் விரும்பி சாப்பிடுவதற்கு ஒரு முக்கிய காரணம். ஐரோப்பாவை தாயகமாக கொண்ட ‘‘ஆப்பிள்’’, இன்று உலகம் முழுவதும் உள்ள பனி மலைப் பிரதேசங்களில் பயிர் செய்யப்படுகிறது. சுமார் 700 ரகங்களை கொண்ட ஆப்பிள்,ஒவ்வொரு நாட்டிலும் சுவை உடைய ரகமாக தேர்ந்தெடுத்து பயிரிடப்படுகிறது.

உதாரணமாக அமெரிக்காவில் ஆப்பிள் புளிப்பு சுவையுடன் இருக்கும். ஆனால் இந்தியாவில் ஆப்பிள் இனிப்பு சுவையானதாக இருக்கும். இந்தியாவை பொறுத்தவரை ஐம்மு காஷ்மீர், இமாசலப் பிரதேசத்தில் ஆப்பிள் அதிக அளவில் விளைகிறது. இங்கு விளையும் ஆப்பிள் இந்தியா மட்டுமின்றி, உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

<u>உற்பத்தி அதிகம்</u>

கடந்த ஆண்டுகளை விட, இந்த ஆண்டு இந்தியாவில் ஆப்பிள் விளைச்சல் மிக அதிகமாக உள்ளது. அதனால் இதுவரை இல்லாத அளவுக்கு விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது சிம்லாவில் இருந்து அதிக அளவில் ஆப்பிள் மதுரைக்கு வந்த வண்ணம் உள்ளது. இதனால்

அனைத்து பழ கடைகளிலும் ஆப்பிள்கள் குவித்து வைக்கப்பட்டு உள்ளன. ஆனால் அதில் உள்ள குறை என்னவென்றால், அனைத்து ஆப்பிள்களும் அளவில் மிக சிறியதாக உள்ளன. குறைந்த விலையில் கிடைப்பதால், அளவை கவலைப்படாமல் பொதுமக்களும் அதிகளவில் வாங்கி செல்கின்றனர்.

ஏற்றுமதி

இது குறித்து பழ வியாபாரிகள் சிலர் கூறியதாவது:–

ஆப்பிள்களில் பல ரகம் உண்டு. அளவில் பெரியதாக இருக்கும் ஆப்பிள்கள் விலை அதிகமாகும். சிம்லாவில் இதன் விலை ஒரு கிலோ ரூ.92 ஆகும். இந்த ஆப்பிள்கள் பெரும்பாலும் வெளிநாட்டிற்கு தான் ஏற்றுமதி செய்யப்படும். நம்மூர் சந்தைகளில் கிடைக்காது. இதற்கு அடுத்த ரகமான நடுத்தர ஆப்பிளின் ஒரு கிலோ விலை ரூ.62 ஆகும். இந்த ஆப்பிள்கள் வெளி சந்தையில் ரூ.120–க்கு கிடைக்கும். இதனை சற்று வசதியானவர்கள் தான் வாங்கி உண்பார்கள். கடைசி ரக ஆப்பிள் அளவில் மிக சிறியதாக இருக்கும். அதாவது மதுரை உள்பட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இந்த ஆப்பிள் தான் தற்போது விற்பனை செய்யப்படுகிறது. சிம்லாவில் இதன் விலை ஒரு கிலோ ரூ.20 ஆகும். ஆனால் மதுரை சந்தையில் இதன் விலை ரூ.80. அதாவது ஒரு கிலோவுக்கு ரூ.60 கூடுதல் ஆகும்.

சேமிப்பு கிடங்கு

போக்குவரத்து செலவு சிம்லாவில் இருந்து வருவதற்கு சற்று அதிகம் என்றாலும், இந்த தொழிலும் நிலத்தொழில் போல் புரோக்கர்கள் பிடியில் சிக்கி தவித்து வருகிறது. விலை குறைவாக இருந்தாலும் ஆப்பிளை அதிக அளவில் சேமிப்பு கிடங்கில் பதுக்கி வைத்துள்ளனர். மீதமுள்ள ஆப்பிளை தான் விற்பனைக்கு கொண்டு வந்து உள்ளனர். இதில் வருத்தப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், விளையாத ஆப்பிள்களை எல்லாம் அங்கிருந்து குறைந்த விலைக்கு வாங்கி வந்து இங்கு கூடுதல் விலைக்கு விற்கின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**<u>சேலம் மாவட்டத்தில் பரவலாக மழை: அதிகபட்சமாக சங்ககிரியில் 110 மி.மீட்டர் பெய்தது</u>**

சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவில் பரவலாக மழை பெய்தது. இந்த மழையின் காரணமாக நகரில் பல பகுதிகளில் குண்டும் குழியுமாக காணப்பட்ட ரோடுகளில் மழை நீர் தேங்கி சாலைகள் மேலும் மோசமாக மழைநீரால் அரிக்கப்பட்டு சேதம் அடைந்தது. சேலம் மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

சேலத்தில் 57.2 மி.மீட்டரும், ஏற்காட்டில் 3.4 மி.மீட்டரும், வாழப்பாடியில் 10.6 மி.மீட்டரும், ஆத்தூரில் 1.6 மி.மீட்டரும், சங்ககிரியில் 110 மி.மீட்டரும், இடைப்பாடியில் 79 மி.மீட்டரும், ஓமலூரில் 93 மி.மீட்டரும், மேட்டூரில் 55.6 மி.மீட்டரும் பெய்தது.